உ

சிவமயம்.

குஹப்ப்ரஹ்மணே நம :

திருச்சிற்றம்பலம்.

# திருப்பா.

## 5. பரமபதி.

*பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

**தி**ருவாத வூரடிகள் சொற்றவா றடிசிரசு
செப்பொணா ஞானவிண்ணாய்ச்
செறிநினக் கடிவினவி லேழ்பாத லங்களுஞ்
செல்லான நிலையிலெனவாம்
பொருளாரு முடிவினவி லுரையிறந் திடமேய
புலமாகு நிலையிலெனவாம்
பூதபௌ டியவர்த்த மானவுர னாலுநல
போதமறை மறைகளாலுந்
தெருளான வாகம புராணங்க ளாலுமணி
சேரேனை முறைகளாலுந்
திட்டப் படுத்தவொரு குணமுளனு மல்லையிச்
சிறியனேன் மனதுவாக்கால்
ஒருதாறு செய்தோத வமைவையோ வெனையாள
வுள்ளவா னந்தவிளைவே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 1

---

1. **திருவாதவூரடிகள்** சொற்றவாற்றினை,

"கீதமி னியகுயிலே கேட்டி யேலெங் கள்பெருமான்
பாதமிரண் டும்வினவிற் பாதாளமே ழினுக்கப்பால்
சோதிமணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதிகுண மொன்றுமில்லா னந்தமிலான் வரக்கூவாய்."

என்னுந் திருத்தூக்கா னறிக.

**தாறு** = அளவு.

இருள்வலி நிழற்போலு மறிவுமய மென்னநீ
யெங்குமொரு பூர்த்தியாக
இணையின் றிருந்தாலு மந்தவிருள் வலிதுணி
யிலங்குபடி கத்திலொளிர்தல்
பொருவவான் மாக்களில் விசேடமா நிகழ்வையெனல்
பொய்யன்றிவ் வுண்மையுணராப்
புல்லறிஞ ருனையறிய வல்லரல ரெனனிசம்
புன்னெஞ்ச முடையபேயேன்
திருவருட் குப்புறம் பாகநின் றோசொற்ற
தெளிவுகண் டெங்குநிறையோர்
செல்வப் பெரும்பே றுறப்பணிகி றேனுனது
திருவுள வுரித்தென்றுகூ
றொருகிருபை யென்பக்ஷ மாவதெக் கால்கொலோ
வொள்ளருட் பிரவாகமாய்
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 2

பசுபாச மென்றறை யிரண்டுமவை களையருட்
பாங்கிற் றொழிற்படுத்தும்
பதியான தெய்வமு மனாதிநித் தியமெனும்
பழமைத் திறத்தினானும்
அசலவுல காரம்ப மின்னகா லென்னவோ
ரளவையில் லாமையானும்
அகிலத்தி லுள்ளவெவ் வனுபவமு மெண்ணிலா
வயனங்க டோறுமலைபோல்
விசனமுங் கடியுமா வந்ததொன் றாகுமிவ்
விதிநன் குணர்ந்தவென்றன்
விவேகமன மும்புதுமை யெனவின்னு முளுமெனின்
விவேகிக ணகைத்திடாரோ

2. **இருள்வலி** = சூரியன். **துணி** = ஒளி.

3. **அயனம்** = வழி; "அயனமே வழியி னாமம்" என்பது **யகரவெதுகை;** ஈண்டுயிர்கள் கருக்களிற் சேறற்பொருட்டாகலிற் பிறவியென்னலாம். கதியென்பது மிதுவே.

**'கடி'** என்னும் பலபொரு ளொருசொல் ஈண்டின்பத்தை யுணர்த்தி நின்றது; **சூ - நிகண்டு. தொன்று** = பழமை.

உசிதவுள் ளினையுதவி யிருவினைச் சமநிலையி
லுறையவைத் தருளியணவே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 3

**போ**தல்வர லாயுள்ள தனுவா யனாதிப்
புணர்க்கையாய் மூலமலமாய்ப்
புகல்பாச மாகிய வசித்தையும் போதமுறு
புருடனா கியசித்தையும்
பேதப்படுத்திப் பிரிக்கின்ற வீரமும்
பேதமி லபேதமாகப்
பிறங்கவைக் கின்றவொர் சுபாவமும் பரமவுன்
பேரருளி னுக்கலாதி
யாதொரு பொருட்குள்ள தோவிந்த வூராண்மை
யாக்கைவிழு முன்னென்கணே
யாணரோ டெய்தநீ யருள்செயா யேலிங்கி
யாரையொரு தஞ்சமென்பேன்
ஓதரிய தேசோ மயானந்த மேயென்ற
னுள்ளுக்கு ணிமிருமன்பே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 4

**பா**ச ஞானத்தினி லிருந்துகொண் டேயண்ட
பகிரண்ட மெங்குமலரும்
பதிஞான வுயிர்முத்தர் நாமென்று தம்மையும்
பதியையுந் தெரியாமலே
பேசியினி வரவுள்ள புதைநீக்க மரணமே
பெரிதெனும் விதேகமுத்திப்
பேறென்று கொன்னுறுதி கொண்டுதிரி பவரெனப்
பேரருட் பொலிவைநேடுந்

3. **அணவல்** = தழுவல்; நகரவெதுகை.

4. **ஊராண்மை** = மிக்கசெயல்.

தாசனுங் கோடற்கெ னல்லுள்ள மொவ்வுமோ
சகசசன் மார்க்கநுவலுஞ்
சைவசித் தாந்தமு மிடங்கொடுக் குங்கொலோ
தண்ணளி புரிந்துமனமாம்
ஊசலி லிருக்குமெனை யுன்னருட் பீடிகையி
லுறையவைத் தணவியருளே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 5

**அ**ரியவிர தச்சூர பதுமனை வலாரியை
யருச்சுனனை வெள்ளிபொன்னோன்
அலகைமுலை யுண்டோ னியாதோ ருபாயத்தி
னாலுளை மயக்கியதுபோல்
விரிகருணை யதரையே நம்பிநிற் கின்றவென்
விவேகவுணர் வையுமயக்க
மேதினியி லொருவரா லாவதோ வாகாதுன்
மேதக வருட்பெருக்கால்
இரியுமல விருளின்மின் மினிபோ லிருக்குமென்
னிறையறிவை விண்ணின்மணிபோல்
இலகவனை யாமலும் பொருளையறி யாமலு
மிரண்டறப் புல்கலெனுமோ
ருரிமையடை யாமலும் போதலுண் டோகருணை
யுள்ளவா னந்தவிண்ணே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 6

**எ**வ்வுயிர்த் திரளினு மெலாவுலோ கங்களினு
மேகநிறை வாயிருந்தே
இக்கால மக்கால மென்பதின் றெக்காலு
மியாவையு மறிந்துகொண்ணின்

6. **இறையறிவு** = சிற்றறிவு; இறை = சிறுமை, அற்பம்; **சூடாமணி நிகண்டு.**

செவ்விய பெருந்திரு வுளத்தினுக் கறியாது
செய்கரும மொன்றின்றெனாத்
திட்டமா யோர்ந்தவெ னுன்னமது தனையொத்த
சிற்றறிஞ ரறியாமலே
இவ்வுலகில் யாதோர் சழக்கிழைத் திடல்போல
வெம்பிரா னாமுனக்கும்
எட்டா திழைக்கவெணு மாயினிப் புன்மைக்கு
மேற்றமுள தியாதுண்டெனின்
ஒவ்வுமோ வையவிவ் வாறுன்ற னடிமைநா
னுறழ்வின்றி மருள்வதென்னே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 7

**பூ**ர்வகா லத்துநன் முனைவரிறை முதலியோர்
போற்சொலுஞ் சொற்பலிதமும்
புனிதயஞ் ஞங்களிற் சேதன சிருட்டியும்
புணர்தினத் தேபெறுகையுஞ்
சீர்மல்கு மந்த்ரவலி யாற்சொல்லு மாறொரு
சிலீமுகம் புரிசமர்த்துந்
திவ்யதவர் வாக்கொன்றி னாலட்ட சித்தியுந்
தெவ்வற நடக்குமணியும்
பார்மனுடர் முனிலையிற் றேவதைக ணாக்கீர்
பணிப்பதுவு மிந்தநாளிற்
பட்டப் பகற்சூனி யம்மென விருத்தலிற்
பாவியே னுக்கிங்ஙனே
ஓர்கிருபை பெரிதாக வருளவழி யில்லையோ
வொப்பிலா வாண்மையுடையோய்
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 8

7. **யாதுண்டெனின்** = யாது என்னுங் கடாவுக்கு உண்டென்பது விடையாயின்.

8. 'சொலுஞ்சொற்போற் பலிதமும்' எனவியையும்.
**பெறுகை** = மகவுயிர்த்தல்.
**சிலீமுகம்** = அம்பு.
**அணி** = பெருமை; **பிங்கல நிகண்டு.**

**பொா**ற்கலச முலைமினா ரின்பமே சுகமெனப்
புத்திசெய் கின்றபேரும்
புரிகரும மேநலந் தருவதா யுள்ளியப்
போக்கினின் றுழிதருநரும்
நற்களியை நல்குவது நற்கால மிக்கால
நாஞ்செய்வ தேதென்பரும்
நல்லுயி ரடக்கமெந் திரமந்த்ர மௌடத
நமக்குறுதி யெனநிற்பருஞ்
சிற்கடவு ளின்றென வரைந்திடா ரேனுமிவர்
தெருளற்ற வுலகாயதர்
செய்கரும வாதிமுத லோரெனு மனீச்சுரச்
செப்பவா திகளுளொருசார்
உற்சாக மாகப் பொருந்துபவ ரல்லா
லுனக்கன்ப ராவரலரே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 9

**ச**ன்மநில னைத்துறந் தரியதே வைத்தலந்
தனில்வசித் திறைமைசாலுந்
தவவேட தாரியாய் விண்டுபத் திமையோடு
தண்டுழாய் கொண்டுநல்குங்
கன்மமுந லன்னம் படைக்கின்ற தன்மமுங்
கைக்கொண்டு நின்றவொருவர்
கடுவமன விடபேதி யான்மரித் தார்வண்மை
கழுமுதென் கேரளத்தே

---

9. ‘உலகாயதர்’ கொள்கை - “முந்தைநாளிற் சாருவாக னுலகாயதன்” என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் உணரக்கிடக்கின்றது.

9. **‘கருமவாதி’** என்றது - உலகந்தோன்றியழியா தெஞ்ஞான்று முளது; வேதத்தில் விதிக்கப்பட்ட வேள்வி முதலிய கருமங்களே சுவர்க்காதி பயன்களை நேரேயுதவுமென்பன முதலிய வியம்புஞ் சைமினியாரது பூருவ மீமாஞ்சைவழி நிற்பவனை; பரிபூரணானந்த போத வுரையாகிய **சிவசூரியப்பிரகாசங்** காண்க.

**செப்பம்** = வழி; **சூ - நிகண்டு.** **உற்சாகம்** - உத்ஸாஹம் என்பதன் றிரிபு.

10. **தேவைத்தலம்** = திருவிராமேச்சுரமாகிய சிவக்ஷேத்திரம்.

நன்மவுனி யிவரொன்று முண்ணா ரெனப்பலர்
நவின்றிட விருந்தவொருவர்
நசித்தனர் விதைப்புளவை யாலாத லிற்றொடர்பு
நசியாது னருளில்லையேல்
உன்முருக னேனந்த வருளலா துய்வனோ
வுரவருண கிரியடிகளே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 10

---

10. **தொடர்பு** = செயற்கையாகிய பந்தம் ; அஃதிங்கே தீயவூழெனப்படும். இவ்வூழினை, நுகராது நுகர்ந்தொழித்தல் திருவருட்டுணை யுடையார்க் கேயன்றி யேனையோர்க் கியலாதென்பார், "தொடர்பு நசியாதுன் னருளில்லையேல்" என்றாரென்க, **இல்லையேல்** = இல்லையாயின்,

"இளமையு நாற்றமுங் கள்ளும் விழாவும் - முருக வேளு மழகு முருகே." என்னும் **பி-நிகண்டு**ச் சூத்திரத்தானே முருகனென்பது இளமை யென்னும் பொருளும் பயத்தலின் அவ்விளமை, சேய்க்குமாதலிற் றம்மாட்டுப் புத்திரமார்க்கத்தன்மை பாராட்டி "உன்முருகனேன்" என்றாரென்க. உன்முருகனேன் = உன்சேயாகிய யான் ; ஏன் - தன்மை யொருமை விகுதி.

"உரமென்ப வலியே **ஞானம்**" என **ரகரவெதுகையில்** வருமாறு உரம் = ஞானம். இஃது அருணகிரியார்க்கேற்ற அடைமொழி. என்னை? பதியனுக்கிரக சம்பந்தமான பதிஞானமுடைய ராகலின். அந்தச் சம்பந்தானுபவம் -

"அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

'பேசா வனுபூ திபிறந் ததுவே' என்றருளிச் செய்யப்பட்டமையின், கயிற்றைப் பாம்பென்பதுபோலத் திரிவுகாட்சியா னொற்றுமைப் படல், கடாகாயமு மகாகாயமு மொன்றாதல்போல வொற்றுமைப்படல், நிறமுந் தாமரைமலரும் போலக் குணகுணித் தன்மையா னொற்றுமைப்படல், கலப்பில்லாப் பாலு நீரும்போலப் பிரிக்கொணாச் சையோ கத்தா னொற்றுமைப்படல், பேயும் பேயாற் பிடிக்கப்பட்டவனும் போல ஆவேசத்தா னொற்றுமைப்படல், பகற்கதிரொளிமுன் இராக்கதிரொளி போலச் சத்திமங்கி நிற்றலா னொற்றுமைப்படல், இந்தனத் தெரிபோல மிளிராதடங்கிக் கிடத்தலா னொற்றுமைப்படன் முதலியனவாகக் கூறப்படுவனவற்று ளெதுவு மினிது பொருந்தாதென்க. மோனத்தின் பின்னே ஞானானுபவமாமென்பது கொண்டும் இஃதியாப்புறுத்தப்படும்.